IJCRT.ORG ISSN : 2320-2882

INTERNATIONAL JOURNAL OF CREATIVE RESEARCH THOUGHTS (IJCRT)

An International Open Access, Peer-reviewed, Refereed Journal

# சவ்வாது மலையாளி இன பழங்குடி மக்களின் பிறப்புச் சடங்குகள்

**ஆய்வாளர்**
**கோ. வேல்முருகன்**
**முனைவர்பட்ட ஆய்வாளர்**
**தமிழியல் துறை**
**அண்ணாமலைப் பல்கலைக்கழகம்**

**நெறியாளர்**
**முனைவர் வா.அறிவழகன்**
**இணைப்பேராசிரியர்**
**தமிழியல் துறை**
**அண்ணாமலைப் பல்கலைக்கழகம்**

**ஆய்வுச் சுருக்கம்**

நவீன அறிவியல் காலம் புகாத பல்லாயிரம் ஆண்டுகளுக்கு முன்பு மனிதர்கள் இயற்கையை சார்ந்து வாழ்தலும் அது குறித்த நம் முன்னோர்கள் கண்டு அமைத்த அணுகுமுறைகளின் வெளிப்பாடுகளே சடங்குகளாக அமைந்துள்ளன. மனிதர்கள் தமது அச்சங்களையும் கவலைகளை போக்கும் வகையில் சில நம்பிக்கைகளையும் மேற்கொள்கின்றனர். அந்த நம்பிக்கைகளுக்கு செயல் வடிவமாக அமைவதே சடங்குகளாகும். அவ்வாறாக செய்யும் சடங்குகள் மூலமாக தமக்கு வரும் இடையூறுகள் நீங்கும் என்று நம்புகின்றனர். நம்பிக்கை, பண்பாடு ஆகிய வழிநிலைகளிலே சடங்குகள் எனும் படிநிலைகளோடு அமையப் பெறுவதால் இவ்வுலகம் நிலைத்து நிற்கிறது. அத்தகையப் பண்பாட்டு தொடர்புடன் ஒவ்வொரு சமூகத்தினரின் வாழ்வியலிலும் சடங்குகள் அமைந்திருக்கின்றன. சடங்குகள் நாகரிகத்தின் உச்சியில் வாழ்பவர்களிடத்திலும் எல்லாக் காலங்களிலும் சடங்குகள் நிகழ்த்தப்பட்டு வருகின்றன. அதுபோல மனித வாழ்வில் பிறப்பு முதற்கொண்டு இறப்பு வரையிலும் பல்வேறு சடங்குகள் பின்பற்றப்படுகின்றன. அவ்வகையில் மனித வாழ்வில் தொடக்கமாக பிறப்பு நிலை கருதப்படுகின்றன. மனித வாழ்வில் பல்வேறு வகையான சடங்குகள் காணப்பட்டாலும் பிறப்புச் சடங்குகளும் முக்கியத்துவம் தரப்படுகின்றது. சடங்குகள் செய்வதில் இனத்திற்கு இனம் மாறுபட்டாலும் பழக்கம் ஒரே விதமாகவே அமைகின்றன. எனவே, சடங்குகள் வழி ஒரு சமுதாயத்தின் அடிப்படை அடையாளத்தை வெளிக்கொணரலாம்.

**திரவுச்சொற்கள்**

மலையாளி, சடங்குகள், குழந்தைப்பேறு, கண்ணேறு கழித்தல், காது குத்துதல்.

**முன்னுரை**

உலக நாடுகளிலேயே இந்தியாவில்தான் அதிகமான பழங்குடிகள் வாழ்கின்றனர். உலகப் பழங்குடிகளில் ஏறக்குறைய நான்கில் ஒரு பகுதியினர் (85 மில்லியன்) இந்தியா எங்கும் சிதறிக் காணப்படுகின்றனர். மொத்தம் 705 பழங்குடிச் சமூகத்தார் உள்ளனர். தமிழகத்தில் மட்டும் 36 வகையான பட்டியல் பழங்குடியினர் (Scheduled tribes) வாழ்கின்றனர். தமிழக மக்கள் தொகையில் அவர்களின் எண்ணிக்கை 1.02%. இவ்வகையில் மலைவாழ் மக்கள் இன்றைய மக்களின் வாழ்வியலிருந்து முற்றிலும் மாறுபட்டவர்களாகக் காணப்படுகின்றனர். பண்டையக் காலம் முதல் இக்காலம் வரையில் பிறப்பு முதற்கொண்டு இறப்பு வரை சடங்குகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. ஆனால் பழங்குடியின மக்கள் மட்டும் அன்று முதல் இன்று வரையிலும் ஒரே நிலையில் தான் வாழ்ந்து கொண்டிருக்கின்றனர். அவ்வகையில் முன்னோர் வகுத்து தந்த சடங்குகளை பழமை மாறாமல், அதனைப் பின்பற்றி வருபவர்களே பழங்குடிகள். அவர்களின் பல தரப்பட்ட நம்பிக்கைகளுக்கு செயல்

வடிவமாகவே சடங்குகள் அமைக்கப்படுகின்றன. எனவே, சவ்வாது மலையில் வாழும் '**மலையாளி**' இனப் பழங்குடிகள் நிகழ்த்தும் சடங்குகளில் ஒன்றான பிறப்பு சடங்குகளை பற்றி ஆராய்வதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

**மலையாளி பழங்குடியினர்**

கிழக்குத் தொடர்ச்சி மலைகளில் ஒன்றான பழைமை வாய்ந்த மலைகளில் ஒன்றே சவ்வாது மலை. இது வேலூர், திருவண்ணாமலை, திருப்பத்தூர் மாவட்டங்களை கொண்டு அமையப்பெற்ற மலையாகும். அங்கு வாழும் மலை மக்கள் மலையாளி இனப் பழங்குடியினர் ஆவர். சவ்வாது மலை பழங்குடி மலையாளிகள் என்னும் சொல் பேச்சுவழக்கு சொல். 'மலையன்' '**மலையமான்**' '**மலையர்**" என்பது இலக்கிய வழக்குச் சொல். சங்க கால குறிஞ்சிநில தலைவர்களுக்கு மலையன், மலையமான், மலையர் என்ற பெயர்கள் இருந்ததைப் பழந்தமிழ் இலக்கியங்கள் வழி அறிய முடிகிறது. (எ-கா, மலையமான், திருமுடிக்காரி, கொல்லி மலையாளர்)

மலையாளி என்றால் மலையை ஆள்பவன் என்பது பொருள். முன்பு ஒரு காலத்தில் பாண்டிய மன்னன் படையிலிருந்து இவர்களின் முன்னோர்கள் போருக்கு அஞ்சி காஞ்சியில் இருந்து நாட்டை விட்டு வெளியேறி பல்வேறு மலைகளில் தஞ்சம் அடைந்துள்ளனர். பின்பு, இம் மக்களிடம் மலையை ஆளும்படியாக நியமனம் செய்துவிட்டு சென்றதால் தங்களுக்கு மலையாளி என்ற பெயர் கிட்டியதாகவும் அவ்வழியாக வாழ்ந்து வந்த இனத்தவர்களே சவ்வாது மலை மலையாளி பழங்குடி இனத்தவராவர். மலையாளி பழங்குடியினர் தங்களை 'காராளர்' வம்சம் என்றும் வேளாளர் வம்சம் என்றும் தங்களை இன்று அழைத்துக் கொள்கின்றனர். இவ்வகையில் மலையாளி என்ற பெயர்களில் வாழ்ந்து வருபவர்களே சவ்வாது மலை பழங்குடி இனமக்கள்.

**சடங்கு விளக்கம்**

''**முற்காலத்தில் காரண காரியத்தோடு செய்யப்பட்ட செயல்களைப் பிற்காலத்தவர் அர்த்தம் புரியாமல் மரபாகப் பின்பற்றுகின்றனர். என்பதையே சடங்குகள் என்று கூறலாம்**''[1] மனிதர்களின் பிறப்பு முதல் இறப்பு வரை பலவகையான சடங்குகள் இடம் பெறுகின்றன. **ஒரு தனி நபரால் தொடங்கப்படும் ஒரு செயல் பின்பு அனைவராலும் பின்பற்றப்பட்டு பின்னர் பழக்கமாகவும் சமுதாயத்தில் ஏற்றுக்கொள்ளப்பட்டு பின்பு சடங்காக மாறுகின்றன**''[2]

சடங்கு என்னும் சொல்லுக்கு தொல்காப்பியம்,

"**பொய்யும் வழுவும் தோன்றிய பின்னர்**
**ஐயர் யாத்தனர் கரணம் என்ப**"[3]

என்று பொருள் தருகின்றது.

"**மக்களின் அன்றாட வாழ்வில் பண்பாட்டு அனுபவங்களை அடிப்படையாகக் கொண்டு கூட்டு வாழ்க்கைப் பண்பினைப் பெற்று வாழ்வில் உண்டாகும் சிக்கல், இன்னல், தண்டனை ஆகியவற்றை எதிர்கொள்ளும் வகையில் தோன்றியவை சடங்குகள் என்கின்றார்**"[4] கைலாசபதி . க கிரியாவின் இன்றைய தமிழ் அகராதி "**சாஸ்திரம் விதிப்பதால் அல்லது வழக்கமான காரணமான பிறப்பு, பூப்பு, திருமணம், இறப்பு ஆகிய நிகழ்வுகளில் ஏற்படும் செயல்களே சடங்கு**"[5] என்று பொருள் தருகின்றது. எனவே, சடங்கு என்பது நன்மையை கருதியே செய்யக்கூடிய செயலாகும்.

**பிறப்பு சடங்கு**

குழந்தை பிறப்பதற்கு அறிவியல் காரணம் அறிய பெறாத பழங்குடியினர் அவற்றை காக்கவும், குழந்தைகளின் பிறப்பு சிறப்பாக இருக்கவும் பிறந்த குழந்தைக்கு வளர்ச்சியும் நலனும் சிறப்பாக அமையவும் செய்யப்படும் சடங்குகள் 'பிறப்பு சடங்குகள்' என்கின்றனர்.

குழந்தைச் செல்வம் மனித வாழ்வில் இன்றியமையாத ஒன்றாகக் கருதப்படுகிறது. மிகுந்த செல்வம் இருப்பவர்களாயினும் குழந்தைச் செல்வம் இல்லாதவர்களைச் சமூகம் 'மலடி' என்ற பட்டம் சூட்டி நல்ல செயல்களிலிருந்து அவர்களை விலக்கி வைக்கும் நிலைதான் இன்றும் காணப்படுகிறது. இதனை, வள்ளுவர் குழந்தைச் செல்வம் பற்றி,

"**குழலினிது யாழினிது என்பதம் மக்கள்**
**மழலைச் சொல் கேளாதவர்**"[6]

என்று குழந்தைப்பேறு பற்றியும் விளக்குகிறார்.

**பிரசவம்**

பத்து வருடங்களுக்கு முன்பெல்லாம் கருவுற்ற பெண் பேறுகால நேரம் நெருங்கியதும் குடியிருக்கும் வீட்டிற்கு சிறிது தூரத்தில் சிறு குடிசையைக் கட்டி நல்ல நாளில் அப்பெண்ணை குழந்தை பிறக்கும் வரை அவ்விடத்திலேயே தங்க வைப்பர். பின்பு அப்பெண் குழந்தை பிறக்கும் வரையிலும் வீட்டிற்குள் அனுமதிப்பதில்லை. இரவு நேரங்களிலும் சரி அப்பெண் அக்குடிசையில்தான் தங்க வேண்டும், அப்பெண்ணிற்குத் துணையாக மருத்துவம் செய்யும் மருத்துவச்சியோ, ஊரில் வயதான பாட்டி ஒருவரோ உடன் தங்க வைக்கப்படுகின்றனர். பின்பு குழந்தை பிறந்தவுடன் வைக்கோல் எடுத்து அக்குடிசையில் பரப்பி அதன் மேல் பாயை விரித்து பின் சேலையை விரித்து தாய், பிள்ளை இருவரையும் அதன்மேலே படுக்க வைக்கப்படுகின்றனர் வைக்கோல் தாயையும், குழந்தையையும் கதகதப்பாக வைக்கப் பயன்படுத்தப்படுகிறது.. தற்போது மருத்துவ வசதி பெருகி உள்ளமையால் பிரசவம் பெருமளவில் மருத்துவமனைகளில் நடைபெறுகின்றன. சில தவிர்க்க முடியாத காரணங்களால் ஒரு சில பிரசவங்கள் மலைப்பகுதியில் நடைபெறுவதாகவும் மக்கள் கள ஆய்வில் தெரிய வருகின்றது..

**குழந்தையை நீராட்டுதல்**

மலையாளிகள், **பிறந்த குழந்தைக்கு மூன்றாம் நாள், ஐந்தாம் நாள் தண்ணீர் என்று நீராட்டு நடத்துகிறார்கள். குழந்தைக்கு ஐந்தாம் நாள் நீராட்டு முடிந்தவுடன் கருவளையம், கருகமணி ஆகியவற்றை குழந்தைக்கு அணிவிக்கின்றனர். குழந்தை பிறந்து பதினோராவது நாள் தாய்க்கு தேங்காய் எண்ணெய், விளக்கெண்ணெய், எள் எண்ணெய் ஆகிய மூன்று எண்ணெய்கள் கலந்து அரப்புத்தூள் ஆகியவற்றுடன் தலையில் தேய்த்துக் குளிக்க வைக்கப்படுகின்றனர். பின்னர் குழந்தைக்கு மிதமான வெந்நீரில் வசம்பு, மஞ்சள் இரண்டையும் அரைத்து தேய்த்தும் நீராட்டுகின்றனர். பின்னர் வசம்புக் கிழங்கினை நீரில் ஊறவைத்து பின்னர் அதனை சிறிது சிறிதாக நறுக்கி நூலால் கோர்த்து குழந்தையின் கையில் கட்டப்படுகின்றது. அவ்வாறு கட்டப்படுவதன் வழியே குழந்தைக்கு தோஷம் வராமலும், பாலகவுச்சி, சிறுநீர் நாற்றமில்லாமல் இருக்கும்**''7 என்று தகவலாளர் மீனாட்சி அவர்கள் கூறுகின்றார்.

**பிறந்த நேரம் கணித்தல்**

குழந்தை பிறந்த நேரத்தை சரியாக குறித்துக் கொண்டு பின்னர் அந்நேரத்தை ஜோதிடரிடம் கொண்டுபோய் கணித்து பார்ப்பது தற்பொழுது நடைமுறையில் ஓர் வழக்கமாக உள்ளது. மலையாளி மக்கள் சோதிடம் பார்க்கும் வழக்கத்தில் தற்போது அதிகமாகவே நம்பிக்கை கொண்டுள்ளனர். குழந்தை பிறந்த நேரத்தைக் கொண்டு குழந்தையின் வாழ்க்கை நிலை, படிப்பு, பிறந்த நேரம் சரியாக உள்ளனவா என்றும் பார்க்கப்படுகிறது. பெரும்பாலும், சாதகம் குழந்தை பிறந்த ஒரு வருடத்திற்கு பிறகு எழுதப்பட்டு வருகின்றன.

**பெயர் வைத்தல்**

குழந்தைப் பிறந்ததும் குழந்தைக்கு பெயரிடும் வழக்கம் முறைப்படி நடத்துதல் அனைவரிடமும் காணப்படுகின்றன. சங்க காலத்திலும் குழந்தைக்குப் பெயரிடும் வழக்கம் இருந்துள்ளமையை கலித்தொகைப் பாடலில்,

> ''**முதல்வன் பெரும்பெயர் முறையுளிப் பெற்ற**
> **புதல்வற் புல்லிப் பொய்த்துயில் துஞ்சும்**''8

என்ற அடிகள் வாயிலாக அறிய முடிகின்றது. பெயர்களை முதன்மைப்படுத்தும் சமூக நிலை முன்னோர் மரபு, குடும்ப உறவு முறைகளைப் போற்றும் விதமாக பெயரிடும் சடங்குகள் பின்பற்றப்பட்டு வருகின்றன.

மலையாளிகள் குழந்தை பெயரிடுதல் சடங்கை பெருமையாகவும் ஒரு விழா போன்றும் கொண்டாடுகின்றனர். குழந்தைக்கு பெயர் சூட்டுதல் செய்தியை முதலில் ஊர்ப் பொதுமக்களுக்கும், உறவினர்களுக்கும் முன்கூட்டியே தெரிவித்து, பெயர் சூட்டும் நாளன்று பச்சரிசி பானையுடன் தன் குலதெய்வ கோவிலுக்கு பொங்கல் வைத்து, பின்னர் தெய்வத்தின் முன்பு ஒரு வாழை இலையை விரித்து புத்தாடை உடுத்தி குழந்தையை கிழக்கு முகம் பார்த்துவாறு படுக்க வைக்கின்றனர். மலையாளி இனத்தில் உள்ள பூசாரி குழந்தையின் தலையில் சிறிது முடியை அறுத்து எடுத்து தெய்வத்தைப் பார்த்தவாறு அக்குழந்தைக்கு தெய்வத்தின் பெயரையோ அல்லது குழந்தையின் மூதாதையரின் பெயரையோ வைக்கப்படுகிறது. தெய்வப் பெயர்களான வேடியப்பன், முருகன், பெருமாள் என்று ஆண் குழந்தைக்கு பெயர்கள் வைக்கப்படுகிறது. பெண் குழந்தைக்கு பேத்தியம்மாள்,

வள்ளி, காளியம்மா என்ற பெயரும் வைக்கப்பட்டுள்ளன. தற்பொழுது காலத்திற்கு ஏற்றவாறு தங்கள் குழந்தைகளுக்கு பிறமொழி சொற்களைக் கொண்டும் பெயர்கள் வைக்கின்றனர்.

**கண்ணேறு கழித்தல்**

குழந்தைகளுக்கு கண்ணேறு கழிப்பு செய்வதால் கண்ணேறு அழிந்துவிடும் என்பது இக்காலத்திலும் அனைவரிடமும் உள்ள நம்பிக்கையாகும். சில தீமைகள் விளைவிக்கும் சக்தி கண்களுக்கு உண்டு என்பதாலும், பிறர் கண்பட்டால் குழந்தைக்கு நோய் நொடி வரும் என்றும் நம்புவதாலும் குழந்தைகளுக்கு கண்ணேறு கழிப்பு செய்கின்றனர். எனவே, தான் கல் அடிப்பட்டாலும் கண்ணடி படக்கூடாது என்ற பழமொழியும் பலர் கூறுவர். கண்ணேறுப்பட்டதைக் கழிப்பதற்காக சுண்ணாம்பும் மஞ்சளும் கொண்டு சூடம் (கற்பூரம்) ஏற்றி பின்னர் அதனை, சுற்றி வீதியில் எறிவர்.

> **"கண்ணான கண்ணார்க்கு கண்நோக்கும் வாராமல்**
> **சுண்ணாம்பும் மஞ்சளும் சுற்றிஎறி கண்ணார்க்கு"**[9]

என்று தமிழர் நாட்டுப்புறப்பாடலில் நா.வானமாமலை அவர்கள் குறிப்பிட்டு பாடியுள்ளார். குழந்தையை வெளியில் கொண்டு வந்தாலே கண் பட்டுவிடும் என்பர். அவ்வாறாக கண்ணேறு கழிப்பதற்கு மூன்று இடத்து காலடிமண், வர மிளகாய், உப்புக்கல்லு என மூன்றையும் சேர்த்து அந்தி சாய்கின்ற வேளையில் குழந்தைக்கும் தாய்க்கும் சேர்த்து கண்ணேறு கழிப்பர். கண்ணேறு கழித்த பொருளை வீட்டின் முகப்பிலோ, முச்சந்திலோ, சாணராட்டியில் அடுப்பு நெருப்புபெடுத்துக் கொண்டு கண்ணேறு கழித்த பொருள்களை போடுவர். ஒருவேளை குழந்தை காரணம் புரியாமல் அழுதால் தேங்காயை தலையில் மூன்று முறை சூடமேற்றி சுற்றி முச்சந்தியில் உடைப்பர். இவ்வாறாக கண்ணேறு கழிக்கப்படுகின்றது.''10 என்று தகவலாளி அம்சா கூறுகின்றார்.

**முடிவுரை**

மனித வாழ்வில் பல்வேறு சடங்குகள் நடைபெற்றாலும் பிறப்புச் சடங்கு என்பது தலையாயது. அவ்விதமாக குழந்தைக்கு எவ்விதத் தீங்கும் நேராமல் பாதுகாக்கவும் பிறப்பு சடங்குகள் அமையப்பெறுகின்றன. கருவுற்ற பெண் பாதுகாப்பாக இருக்கவும் பேறுகாலச் சடங்கு முறையில் குழந்தை வளம் பெறவும் செய்யப்படும் சடங்கே பிறப்பு சடங்குகளாகும். குழந்தைகள் நன்றாக வளர, குழந்தை பிறப்பதற்கு முன்னும் குழந்தைப் பிறந்த பின்னும் செய்யக்கூடிய பல சடங்குகளும் சிறப்பானதாகும். பெயர் வைத்தல், கண்ணேறு கழித்தல் போன்ற சடங்குகளைக் கொண்டு குலதெய்வத்திற்கு முடி இறக்கி காதுகுத்துதல் வரை சடங்குகள் செய்யப்படுகின்றன. குழந்தை ஆணாக இருந்தாலும், பெண்ணாக இருந்தாலும் இருகுழந்தைக்கும் பொதுவாகவே பிறப்பு சடங்குகள் அமைகின்றன. சவ்வாது மலையாளி இனமக்கள் முன்னோர்கள் வழிவந்த பழக்கங்களை கொண்டே சடங்குகளை நடத்தி வருகின்றனர். பல்வேறு தெய்வ நம்பிக்கைகளோடும் சடங்குகள் நடைபெறுகிறது. சவ்வாதுமலை மலையாளிகள் வாழ்வில் பிறப்புச் சடங்குகள் முதன்மையாகவும் முக்கியத்தும் பெற்றும் சிறப்பாக நடத்தப்பெறுகின்றன என்பதை இக்கட்டுரையின் வாயிலாக அறிய முடிகிறது.

**அடிக்குறிப்புகள்**

1. விஜயலட்சுமி. த, இரவளப் பழங்குடிகளின் வாழ்வியல் சடங்குகள். ப. 48
2. கோதண்டராமன். மா நாட்டுப்புறவியலும் பண்பாட்டு சடங்குகளும். ப. 159
3. தொல்காப்பியம். பொருளதிகாரம் கற்பியல். நூ.4
4. கைலாசபதி. க பண்டையத்தமிழர் வாழ்வும் வழிபாடும் ப.93
5. ராமகிருஷ்ணன்.எஸ் கிரியாவின் தற்கால தமிழ் அகராதி கிரியா பதிப்பகம் சென்னை
6. திருக்குறள் 66
7. தகவலாளர் மீனாட்சி பெண் வயது 55 விரப்பனூர்
8. கலித்தொகை பாடல்-75(24-25)
9. வானமாமலை. நா தமிழர் நாட்டுப்புறப்பாடல்கள். ப.23
10. தகவலாளர் அம்சா பெண் வயது- 47 கோவிலாண்டூர்.